செ.வெ.எண்: 10 நாள்: 05.01.2018

**புதுக்கோட்டை மாவட்டம், புலியூரில் பொதுப்பணித்துறையின் சார்பில் கட்டப்பட்ட கட்டடங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

புதுக்கோட்டை மாவட்டம், குன்றாண்டார்கோவில் ஊராட்சி ஒன்றியம், புலியூரில் பொதுப்பணித்துறையின் சார்பில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களின் கட்டுமானப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் (03.01.2018) அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் புலியூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் பொதுப்பணித்துறையின் சார்பில் நபார்டு திட்டத்தின்கீழ் ரூ.83.04 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பள்ளிக்கட்டடத்தை பார்வையிட்டார். இந்த அரசு பள்ளி கட்டடம் தரைத்தளம் மற்றும் முதல் தளம் ஆகிய இரண்டு தளங்களை கொண்டது. இக்கட்டடத்தின் தரை தளத்தில் இரண்டு வகுப்பறைகள் மற்றும் ஒரு ஆய்வகமும், முதல் தளத்தில் ஒரு வகுப்பறை மற்றும் ஒரு ஆய்வகம் ஆகியவற்றின் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதே போன்று புலியூரில் ரூ.21 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட கால்நடை மருந்தக கட்டட கட்டுமானப் பணியினை பார்வையிட்டார். இக்கட்டடத்தில் கட்டப்பட்டுள்ள கால்நடை மருத்துவர் அறை, அலுவலக அறை, மருந்தக அறை, கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கும் கொட்டகை உள்ளிட்ட பல்வேறு அறைகளின் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வில் பள்ளி கட்டடம் மற்றும் கால்நடை மருந்தக கட்டடங்களில் மின்சார வசதி மற்றும் பிற பணிகளை விரைவாக முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் உத்தரவிட்டார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் புலியூர் நியாய விலைக்கடையில் பொதுமக்களுக்கு வழங்குவதற்காக வைக்கப்பட்டுள்ள உணவு பொருட்களின் எடை அளவினை எடை இயந்திரம் மூலம் சரி பார்த்து ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது பொதுப்பணித்துறை இளநிலைப் பொறியாளர் திரு.பாஸ்கர் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**